For Candidates Admitted From 2015-2017

2015 MTA 42C

ROLL NO....................

எம்.ஏ. பருவத்தேர்வுகள், ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் நான்காம் பருவம்

இலக்கண மரபு

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. பழநாளில் இலக்கணம் என்ற சொல்லிற்கு வழங்கப்பட்ட வேறு பெயர்கள் யாது?
2. ஐந்திலக்கண அமைப்பில் வெளிவந்த முதல் நூல் எது? ஆசிரியர் பெயர் என்ன?
3. புறப்பொருள் வெண்பாமாலையின் முதல் நூல் எது?
4. அணியிலக்கணம் கூறும் முதன்மை நூல் எது?
5. நிகண்டு குறிப்பு வரைக.
6. பிங்கல நிகண்டின் ஆசிரியர் யார்?
7. அகராதி வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
8. அகராதிக்கலை, அகராதியியல் எனும் சொற்களுக்கு இணையாக ஆளப்பட்ட சொல் எது?
9. சித்திர கவி விளக்கத்தின் ஆசிரியர் யார்?
10. உரைநடையிலமைந்த இலக்கண நூல்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

பின்வரும் வினாக்களுக்கு 300 சொற்களில் விடையளி.

11. அ. இலக்கணத்திற்கு வேறு பெயர்களைக் கூறி விளக்கம் தருக.

(அ)

ஆ. இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்- விளக்குக.

12. அ. யாப்பருங்கலக்காரிகை சிறப்பினை எழுதுக.

(அ)

ஆ. நவநீதப்பாட்டியல் அமைப்பினை விளக்குக.

13. அ. சூடாமணி நிகண்டு குறித்து எழுதுக.

(அ)

ஆ. திவாகரம் நிகண்டு குறித்து எழுதுக.

14. அ. பன்மொழி அகராதி குறித்து எழுதுக.

(அ)

ஆ. கலைக்களஞ்சியம் சிறப்பினை எழுதுக.

15. அ. விசாகப் பெருமாளையர் அணியிலக்கணம் அமைப்பினை எழுதுக.

(அ)

ஆ. கால்டுவெல் ஒப்பிலக்கணம் குறித்து எழுதுக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

எவையேனும் மூன்று விளாக்களுக்கு 1500 சொற்களில் விடையளி.

16. தொல்காப்பியத்தின் அமைப்புமுறையினையும், சிறப்புகளையும் ஆய்க.
17. தண்டியலங்காரம் நூல் சிறப்பினை விளக்குக.
18. பல்வேறு நிகண்டுகளைக் குறிப்பிட்டு விளக்குக.
19. சிறப்பான தமிழ் அகராதிகளின் சிறப்பினைத் தொகுத்துரைக்க.
20. உரை நடையிலமைந்த இலக்கண நூல்களைக் குறிப்பிட்டு அமைப்பினை ஆய்க.

*********

For Candidates Admitted From 2015-2017

2015-17 MTA 43C ROLL NO....................

எம்.ஏ பருவத்தேர்வுகள் ஏப்ரல்- 2019

தமிழ் இலக்கியம் நான்காம் பருவம்

தமிழர் மெய்யியல்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. தத்துவம் என்ற சொல்லின் பொருள் என்ன?
2. அவைதிக மெய்யியல் –விளக்கும் தருக.
3. சாங்கியம்- குறிப்புரைக்க.
4. இருவகைச் சத்காரியவாதங்கள் எவை?
5. தமிழர் மெய்யியலில் தனிப்பெரும் நூல்களாக விளங்கும் தமிழ் இலக்கியங்களுள் எவையேனும் இரண்டனைக் கூறு.
6. சிவம்- சொற்பொருள் விளக்கம் தருக.
7. சிறுகுறிப்பு வரைக- திருமந்திரம்.
8. திருமாலியம் என்றால் என்ன? விளக்கம் தருக.
9. வள்ளலாரின் உரைநடை நூல்கள் எவை?
10. தமிழர் மெய்யியலில் வள்ளுவர் வள்ளலார் வழித்தோன்றலாக விளங்குபவர் யார்?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.

11. அ. மெய்யியலை வரையறை செய்க.

(அல்லது)

ஆ. மெய்யியல் குறித்த இலக்கியக் குறிப்புகளை மதிப்பிடுக.

12. அ. யோகம்- விளக்கம் தருக.

(அல்லது)

ஆ.ஒன்பது திரவியங்களை விளக்கி வரைக்க.

13. அ.பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்- இத்தொடர் தமிழர் மெய்யியலில் பெறும் இடத்தை ஆய்க.

(அல்லது)

ஆ. சங்ககாலச் சைவசமயம் குறித்து எழுதுக.

14. அ.திருவாசகம் உணர்த்தும் மெய்யியல் குறிப்புகள் எவை?

(அல்லது)

ஆ.இராமானுசரின் மெய்யியல் கோட்பாடுகளை விவரி.

15. அ.வள்ளலாரின் ஆன்மநேய ஒருமைப்பாடு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. பெரியாரியம் – குறிப்பு வரைக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

16. தத்துவ இயலின் வகைகளை விளக்கி உரைக்க.
17. இந்திய தத்துவ தரிசனங்களைக் கூறிக் கட்டுரை வரைக.
18. உலகப்பொதுமறை திருக்குறள் - இக்கூற்றை மெய்ப்பிக்க.
19. சைவ சித்தாந்தக் கோட்பாடுகளை விவரித்துக் கட்டுரை வரைக.
20. பெரியாரின் பகுத்தறிவு வாதம் குறித்து விளக்கி எழுதுக.

***************

For Candidates Admitted From 2015-2017

2015-17 MTA 41C ROLL NO....................

ஏம்.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் நான்காம் பருவம்

சங்க இலக்கியம்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. "பூத்த கரும்பின் காயந்த நெல்லின் கழனி ஊரன் மார்பு " - இதில் இடம்பெற்றுள்ள உள்ளுறைப் பொருளைத் தருக.
2. நீர் உறை மகன்றிலின் தன்மை யாது?
3. 'பிரிந்தக்கால் பிறக்கு உரைக்கும் பீடிலார் தொடர்புபோல' விளக்கம் தருக.
4. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள மூன்று பெரும்பிரிவுகள் யாவை?
5. துணை வஞ்சி என்றால் என்ன?
6. பதிற்றுப்பத்து ஒன்பதாம் பத்தில் எந்த சேரமன்னரை எந்த புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்?
7. அறத்தொடு நிற்றலின் முறையாது?
8. எந்த அரசன் தமிழ்அறிதற்பொருட்டு குறிஞ்சிப்பாட்டை பாடினார்?
9. பொருநராற்றுப்படையின் பாட்டுடைத்தலைவன் யார்? யாரல் பாடப்பட்டது?
10. ஆற்றுப்படுத்துதல் – சிறு விளக்கம் தருக.

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ.பாசறைப் பத்தின் சிறப்பினை விளக்கம் தருக.

(அல்லது)

ஆ. குறுந்தொகையில் குறிஞ்சித் திணைப்பாடலில் தலைவன் கூற்றாக வரும் செய்திகளை எழுதுக.

12. அ.வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகனுக்கு சொல்லும் திறத்தை நற்றிணைப் பாடல்வழி எழுதுக.

(அல்லது)

ஆ. தலைவியை ஆற்றுவிக்கும் தோழியை தலைவி வன்புறைத்ததை நெய்தல்கலி பாடல் வழி எழுதுக.

13. அ. புறநானூற்றில் குமணனின் கொடைச்சிறப்பை விளக்குக.

(அல்லது)

ஆ. திருமாலின் தோற்றச்சிறப்பினை எழுதுக.

14. அ. தலைவன் தலைவியை தேற்றும் முறையை குறிஞ்சிப்பாட்டின் வழி விளக்குக.

(அல்லது)

ஆ. தலைவன் நாட்டு மலைச்சிறப்பை எழுதுக.

15. அ. பாடினியின் இயல்பு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. கரிகாலன் அளித்த பரிசில்கள் குறித்து விளக்குக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. குறுந்தொகையில் இடம்பெற்றுள்ள பாலைத் திணைச் செய்திகளை விளக்குக.
17. அகநானூற்றில் இடம்பெற்றுள்ள முல்லைத்திணைச் செய்திகளை நும்பாடப்பகுதி கொண்டு விளக்குக.
18. சேரனின் பெருமையும் போர்ச்சிறப்பையும் விவரிக்க.
19. குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள செய்திகளைத் தொகுத்துரைக்க.
20. கரிகாலனின் சிறப்பை பொருநராற்றுப்படையின் வழி விளக்குக.

***************

For Candidates Admitted From 2018

2018 MTA 21C ROLL NO....................

எம்.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

இடைக்கால இலக்கியம்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

**பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.**

1. திருஞான சம்பந்தர் பாடியவை எந்தத் திருமுறைகளாக உள்ளன?
2. அறுபடை வீடுகள் யாவை?
3. கூடல் இழைத்தல் என்றால் என்ன?
4. திருப்பாற் கடலைக் கடைய திருமால் பயன்படுத்தியவை யாவை?
5. ஐம்பெரும் பூதங்கள் யாவை?
6. முக்கூடற் பள்ளில் இடம் பெறும் மாந்தர்கள் யாவர்?
7. இராமலிங்க அடிகள் தோற்றுவித்த சங்கம் யாது?
8. சனகன் என்பவன் யார்?
9. சரியை நெறியினை ஆய்ந்தவர் யாவர்?
10. சிவ வாக்கியரின் பாடல்களுள் எத்தனை கிடைத்துள்ளன?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

**அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.**

11. அ. திருஞான சம்பந்தர் திருவேத வனத்து இறைவனை எங்ஙனம் போற்றுகிறார்?

**(அல்லது)**

ஆ. ஆசைபத்தில் மாணிக்க வாசகர் சிவனிடம் வேண்டுவன யாவை?

12. அ. காம தேவனிடம் ஆண்டாள் வேண்டுவனவற்றை விளக்குக.

**(அல்லது)**

ஆ. திருவாசிரியத்தில் இடம்பெற்றுள்ள கருத்துகளை எடுத்துரைக்க.

13. அ. அதிவீரராம பாண்டியர் திருக்கருவை இறைவனிடம் கொண்ட பக்தியைப் புலப்படுத்துக.

**(அல்லது)**

ஆ. ஆகூர் வடகரை நாட்டின் வளத்தை விவரிக்க.

14. அ. இராமலிங்க அடிகள் ஆத்ம தரிசனத்தில் கூறுவன யாவை?

**(அல்லது)**

ஆ. தாயுமானவர் ஆனந்தக்களிப்பில் வெளிப்படுத்துவன யாவை?

15. அ. இறைவனுக்கு கிரியை எவ்வாறு செய்யவேண்டும் எனத் திருமூலர் கூறுகிறார்.

**(அல்லது)**

ஆ. உருவ வழிபாடு, சாதி மத வேறுபாடு குறித்து சிவவாக்கியார் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

**பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி**

16. முருகப் பெருமானின் வரலாறு குறித்துக் குமர குருபரர் கூறுவனவற்றை எடுத்துரைக்க.
17. திருமால் பற்றிய புராணச்செய்திகளை நாச்சியார் திருமொழி வழி விளக்குக.
18. முக்கூடற் பள்ளில் வெளிப்படும் அக்கால சமுதாய நிலையைப் புலப்படுத்துக.
19. இராமலிங்க அடிகள் சுத்த சன்மார்க்க வேண்டு கோளாக கூறு வனவற்றை விவரிக்க.
20. யோகம் மற்றும் ஞானம் குறித்துத் திருமூலரின் கருத்துகளை எடுத்துரைக்க.

***************

For Candidates Admitted From 2018

18 MTA 22C

ROLL NO....................

எம்.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

இலக்கணம் – சொல்லதிகாரம்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. பலவின்பாலை உணர்த்தும் ஈறுகள் யாவை?
2. எழுவாய் வேற்றுமைக்குரிய பயனிலைகள் யாவை?
3. பிண்டப்பெயர் கூறும் முறை யாது?
4. 'னகர' ஈற்று முறைப்பெயர் எவ்வாறு விளியேற்கும்?
5. இடைச்சொல்லும், உரிச்சொல்லும் எதனைச் சார்ந்து தோன்றும்?
6. 'தான்' என்னும் பெயர் எவ்வாறு வரும்?
7. செய்யுளில் 'ஆய்' என்னும் சொல் எவ்வாறு திரியும்? சான்று தருக.
8. 'மன்ற' இடைச்சொல் உணர்த்தும் பொருள் யாது? எடுத்துக்காட்டு தருக.
9. நிறத்தை உணர்த்தும் உரிச்சொற்களைக் கூறுக.
10. இரத்தல் பொருளில் வரும் சொற்கள் யாவை?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.

11. அ. பால் குறித்துக் கிளவியாக்கம் தரும் செய்திகளை எழுதுக.

(அல்லது)

ஆ. ஆறாம் வேற்றுமைப் பொருட்பாகுபாடுகள் குறித்து விளக்குக.

12. அ. செய்யுளில் உருபுகள் திரிதல் குறித்து சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ. விளியேற்கும் உயர்திணைப் பெயர்களைச் சான்றுடன் விளக்குக.

13. அ. காரணத்தால் அமையும் உயர்திணைப் பெயர்கள் யாவை?

(அல்லது)

ஆ. பெயர்ச்சொல்லின் இலக்கணம், திணை, பால் குறித்து எழுதுக.

14. அ. வினையெச்ச வாய்பாடுகள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. 'ஓகார' இடைச்சொல் உணர்த்தும் பொருள்களைச் சான்றுடன் விளக்குக.

15. அ. இசை, வறுமைப் பொருளில் வரும் உரிச்சொற்களை சான்றுடன் விளக்குக.

(அல்லது)

ஆ. செய்யுளில் சொற்கள் அடையும் மாற்றத்தின் வகைகளை சான்றுடன் விளக்குக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

16. வினா, விடை குறித்து சான்றுடன் விவரிக்க.
17. வேற்றுமை மயங்கியலில் 'பொருள் மயக்கம்' குறித்து கட்டுரை வரைக.
18. விரவுப் பெயர்கள் குறித்து விளக்குக.
19. இடைச்சொல்லின் பொது இலக்கணத்தையும் அதன் பாகுபாட்டையும் விவரிக்க.
20. எச்சச் சொற்களின் வகைகளைக் கூறி சான்றுடன் விளக்குக.

***************

For Candidates Admitted From 2018

18 MTA 23C ROLL NO...................

எம்.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

பொது மொழியியல் – திராவிட மொழிகள்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

<u>பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.</u>

1. 'காலக் கணக்கிட்டு முறை ஆய்வு' என்றால் என்ன?
2. ' திருத்தி அமைக்கப்பட்ட வடிவங்கள் ' குறித்து எழுதுக.
3. நடுதிராவிட மொழிகளை வகைப்படுத்துக.
4. ' பிராகுயி' மொழி குறித்து எழுதுக.
5. மூக்கின உயிர்கள் எவ்வாறு பிறக்கும்?
6. ஒலி இடம்பெயர்தல் என்றால் என்ன? சான்று தருக.
7. சொல்லாக்கத்தை அடிப்படையாகக்கொண்டு மொழிகளை எவ்வாறு பிரிக்கலாம்? அவை யாவை?
8. வேர்ச்சொல் குறித்து சிறு குறிப்பு வரைக.
9. புதைவடிவத்திற்கு சான்றுடன் தருக.
10. மாற்றிலக்கணத்தின் தந்தை யார்? அவர் எழுதிய நூல் பெயர் யாது?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

<u>அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.</u>

11. அ.மொழியும் மொழியியலும் குறித்து விளக்குக.

(அல்லது)

ஆ. ஒப்பியல் ஆய்வின் தொடக்கநிலை குறித்து எழுதுக.

12. அ. திராவிட மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.

(அல்லது)

ஆ.நடு திராவிட மொழிகளின் சிறப்புகள் குறித்து எழுதுக.

13. அ.மெய்யொலிகளின் பிறப்பு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. உயிரொலி இயைபு குறித்து விளக்குக.

14. அ.உருபன்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ.தனியுருபும், கட்டுருபும் குறித்து எழுதுக.

15. அ. திராவிட மொழிகளில் சொற்களின் நிலை குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. திராவிட மொழிகளில் இயைபு பெறும் இடத்தை விளக்குக.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

<u>பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி</u>

16. திராவிடமொழி ஆய்வின் தொடக்கநிலை குறித்து விவரிக்க.
17. தென்திராவிட மொழிகள் குறித்து கட்டுரைக்க.
18. உயிரொலிகளின் இயைபும் திரிபும் குறித்து விளக்குக.
19. ஓரினமாதல் மற்றும் வேறினமாதல் குறித்துச் சான்றுடன் விவரிக்க.
20. நோம்சாம்ஸ்கியின் மாற்றிலக்கணக் கோட்பாடுகள் குறித்து கட்டுரைக்க.

***************

For Candidates Admitted From 2018

2018 MTA 24E ROLL NO....................

எம்.ஏ. பருவத்தேர்வுகள் ஏப்ரல் 2019

தமிழ் இலக்கியம் இரண்டாம் பருவம்

தமிழர் மானிடவியல்

நேரம் - 3 மணி மொத்த மதிப்பெண்கள் -75

பகுதி – அ ( 10 X 2 = 20 )

பின்வரும் வினாக்களுக்கு 25 சொற்களில் விடையளி.

1. மனித இனம் பற்றிய தேடலை தொடங்கி வைத்தவர் யார்? அவர் எந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர்?
2. தாய் வழிச் சமூகமே முதலில் தோன்றிய சமூக முறை என்றவர் யார்?
3. புற மணக் குழுக்களை எவ்வாறாக அழைப்பர்?
4. மீவியல் இடங்கள் என்பவை யாவை?
5. தெய்வம் ஏறிய பெண்கள் ஆண் குறியீடுகளாய் உயிர்பலி கேட்க காரணம் யாது?
6. சாதிகளின் தோற்றத்திற்கும் பிராமணர்களுக்கும் உள்ள தொடர்பைக் குர்யே எவ்வாறு குறிப்பிடுகிறார்?
7. மதனி மணம் என்றால் என்ன?
8. கொங்கு மண்டலப் பகுதியில் மிகுதியாக வாழ்பவர் யாவர்?
9. இரட்டை நிலைப்பண்புடன் விளங்கும் தெய்வங்கள் யாவை?
10. கொங்கு நாட்டு மக்கள் பழனி முருகனுக்கு எந்த மாதத்தில் காவடி எடுத்துச்செல்வர்?

பகுதி – ஆ ( 5 X 5 = 25 )

அனைத்து வினாக்களுக்கும் 300 சொற்களில் விடையளி.

11. அ. உயிரிலிப் பிறப்புக் கொள்கையை விளக்குக.

(அல்லது)

ஆ. படி மலர்ச்சிக் கோட்பாடு குறித்து விவரிக்க.

12. அ. பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்குமான வேறுபாடுகளை ஆராய்க.

(அல்லது)

ஆ. மந்திரத்தின் தன்மைகளை ஆய்க.

13. அ. தொழிற் பகுப்பில் உள்ள பாலினப் பாகுபாடு குறித்து எழுதுக.

(அல்லது)

ஆ. பின்னை நவீனத்துவப் போக்குகளை எடுத்துரைக்க.

14. அ. தென்னிந்தியத் திருமண முறைகளை விவரிக்க.

(அல்லது)

ஆ. சமஸ்கிருதவய மாதலால் ஏற்பட்ட சமூக மாற்றத்தை விளக்குக.

15. அ. தேவ கணத்தின் அமைப்பாக்கங்களை விவரி.

(அல்லது)

ஆ. புழங்கு பொருள் குறித்து புரோவரின் கோட்பாட்டை எடுத்துரைக்க.

பகுதி – இ ( 3 X 10 = 30 )

பின்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு 1500 சொற்களுக்கு மிகாமல் விடையளி

16. தாய் வழிச் சமூகம் குறித்து ஒரு கட்டுரை வரைக.
17. செயற்பாட்டியம் என்றால் என்ன? விளக்குக.
18. சாதியத்தின் தோற்றம் குறித்து விவரிக்க.
19. ஆதி சமூக அமைப்பு குறித்து ஆராய்க.
20. யாத்திரையின் தன்மைகளை எடுத்துரைக்க.

***************